## 3.9 அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவில் அமைந்த வீட்டு மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கான காலக்கெடு 31.12.2006–ல் முடிவடைந்தது– வரன்முறைப்படுத்துவதற்கான விண்ணப்பங்கள் பெறுவதற்கான காலக்கெடுவை 31.12.2007 வரை நீட்டிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி1) துறை

அரசாணை (நிலை) எண். 56 நாள் : 30.4.2007

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண். 130, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 3.6.1999
2. அரசு கடித எண். 26331/நநி1/99–10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 8.1.2000
3. அரசாணை (நிலை) எண். 79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 16.6.2000
4. அரசாணை (நிலை) எண். 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 1.2.2001
5. அரசாணை (நிலை) எண். 11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.1.2006
6. அரசாணை (நிலை) எண். 59, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.7.2006
7. நகராட்சி நிர்வாக ஆணையரது நேர்முகக் கடிதம் எண். 3567/2007/டிபி 3 நாள் 8.2.2007

**ஆணை**

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் அமைந்த வீட்டுமனைகளை முறைப்படுத்துவதை எளிமைப்படுத்தும் வகையில், திறந்தவெளி கட்டணம் (Open Space Reservation Charges), அபிவிருத்திக் கட்டணம் (Development Charges) மற்றும் முறைப்படுத்துதல் கட்டணம் (Regularisation Fee) ஆகிய மூன்று கட்டணங்களை தனித்தனியே வசூலிப்பதற்கு பதிலாக, சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரே ஒரு தொகையை (சென்னை பெருநகர் நீங்கலாக) மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளுக்கென நிர்ணயிக்கப்பட்ட முறைப்படுத்தும் கட்டணத்தை வசூலித்துக் கொண்டு அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் உள்ள வீட்டு மனைகளை முறைப்படுத்த அனுமதித்து ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. ஏழாவதாகப் படிக்கப்பட்ட நேர்முகக் கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் இதுவரை வரன்முறை செய்யப்படாத மனைகளை வரன்முறை செய்ய ஏதுவாக ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த காலக்கெடுவினை நீட்டிக்க வேண்டும் என்று நகர்மன்றத் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது என்றும், இத்திட்டத்திற்கான காலக்கெடுவினை நீட்டிக்க கோரி நகர்மன்றத் தலைவர்கள், மாமன்றத் தலைவர்கள், குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து கடிதங்கள் பெறப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து 25.7.2006க்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள மனைகளை வரன்முறை செய்வதற்கான கால அவகாசத்தை மேலும் நீட்டித்து தக்க உத்தரவு வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கை தொடர்பான விவாதங்களுக்கு பதிலளித்துப் பேசுகையில் பொது மக்களுக்கு மிகுந்த பயனை அளித்துள்ள இத்திட்டத்தின் கால அவகாசத்தை மேலும் நீட்டிக்க வேண்டும் என்ற பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்று இத்திட்டம் 31.12.2007 வரை நீட்டிக்கப்படும் என சட்ட மன்றப் பேரவையில் அறிவித்தார்கள்.

4. மேற்கூறப்பட்ட சூழ்நிலையில், ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிட்ட திட்டம் மற்றும் அதன் நிபந்தனைகளில் எந்தவித மாற்றமுமின்றி, முறைப்படுத்த விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கால அளவை மட்டும் 31.12.2007 வரை நீட்டிக்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே. தீனபந்து**
அரசுச்செயலாளர்